**செய்தி வெளியீடு எண்: 285** **நாள்: 14.05.2019**

## செய்தி வெளியீடு

தகுதிவாய்ந்த பட்டயப் படிப்பில் தேர்ச்சி பெற்ற டிப்ளமோ மற்றும் பி.எஸ்.சி. பட்டப் படிப்பு முடித்த மாணவர்கள் நேரடி இரண்டாமாண்டு பொறியியற் பட்டப் படிப்பிற்கு தமிழ் நாட்டிலுள்ள அரசு / அரசு உதவி பெறும் / சுயநிதி பொறியியற் கல்லூரிகள்/ அண்ணாமலை பல்கலைக்கழகம் / அண்ணா பல்கலைக்கழக (உறுப்புக் கல்லூரிகள்) / –களில் 2019–20 ஆம் கல்வியாண்டில் சேர்க்கை பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் இணையதள மூலமாக மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும்.

**இணையதள மூலமாக விண்ணப்பிக்க தேவையான நெறிமுறைகள் :**

| | |
|---|---|
| 1) | **விண்ணப்பிக்கும் முறை:** www.accet.co.in / www.accetedu.in / www.accetlea.com என்ற இணையதள வாயிலாக விண்ணப்பித்தல் வேண்டும்.<br>ஆன்–லைன் மூலமாக விண்ணப்பிப்பதற்கு<br>**1)** விண்ணப்பதாரர் தேவையான சான்றுகளுடன் நேரிடையாக ஆன்–லைன் மூலமாக மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும்.<br>2) ஆன்–லைன் மூலமாக விண்ணப்பித்த பின்பு அதை பிரதி எடுத்து உரிய ஆவணங்கள் மற்றும் பதிவுக் கட்டணத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும். |
| 2) | **இணையதள மூலமாக விண்ணப்பங்கள் பதிவு செய்யும் நாள் :**<br>துவங்கும் நாள் : 17.5.2019, முடிவுறும் நாள் : 16.6.2019, மாலை 5.00 மணி வரை |
| 3) | **பதிவுக் கட்டணம் :** விண்ணப்பதாரர் ரூ.300/–க்கான வரைவோலையை “The Secretary, Second year B.E. / B.Tech. Degree Admissions – 2019-20, ACGCET, Karaikudi” payable at Karaikudi, என்ற பெயரில் பெற்று பதிவுக் கட்டணமாக விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பதிவுக் கட்டணமின்றி செலுத்தப்படும் விண்ணப்பங்கள் காரணமின்றி நிராகரிக்கப்படும். SC / SCA / ST மாணவர்களுக்கு பதிவுக்கட்டணம் இல்லை . (விண்ணப்பதாரர்கள் சுய சான்றொப்பமிட்ட சாதிச் சான்றிதழின் நகல் சமர்ப்பித்தல் வேண்டும்). |
| 4) | **மேலும் விவரங்கள் அறிய www.accet.co.in / www.accetedu.in / www.accetlea.com** இணையதள முகவரியில் “INFORMATION AND INSTRUCTIONS TO CANDIDATES” பக்கத்தில் பார்க்கவும். |
| | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் தபல் வாயிலாகவோ அல்லது நேரடியாகவோ பதிவுக் கட்டணத்துடன் கீழ்க்காணும் முகவரிக்கு வந்து சேரவேண்டிய கடைசி நாள்: **16.6.2019**, மாலை **5.00 மணி** |
| | **விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :**<br>**செயலர்,**<br>**நேரடி இரண்டாமாண்டு பி. இ. / பி.டெக். சேர்க்கை 2019–20**<br>**அழகப்ப செட்டியார் அரசு பொறியியற் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி,**<br>**காரைக்குடி – 630 003** |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**